கோரிக்கைகள் தொழிலாளர் நல அலுவலரிடம் விசாரணையில் உள்ளது. 2 கோரிக்கைகளுக்கு தேவைப்படுகிற விவரங்கள் முழுமையாக இல்லாத காரணத்தால், மேலும் விவரங்கள் வேண்டுமென்று கோரப்பட்டு இருக்கிறது. அதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை. ஆனாலும் நேற்று தொழிலாளர்களும் நிர்வாகமும் பேச்சு வார்த்தை நடத்தி ஒரு உடன்பாடு ஏற்பட்டு, இன்றைக்கு வேலைக்குத் திரும்பிக் கொண்டு இருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் உறுப்பினர் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர் நியமனத் தாள்களை 8-5-1990 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்கவேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத் தாள்கள் 9-5-1990 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறும், விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 10-5-1990 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 12-5-1990 சனிகிழமைக் காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் உள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(10-05 மணி)

2. தகவல் கோரல்---தொடர்ச்சி.

(ஈ) இராமேஸ்வரம் வெர்க்கோடு மீனவர் சங்கத்தின் சார்பாக தூதுக் குழுவினர் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த இலங்கை செல்ல அனுமதி பெறுவது குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இராமேஸ்வரம் வெர்க்கோடு மீனவர்கள் சங்கத்தினுடைய சார்பில் ஒரு தூதுக்குழு இலங்கை தலைமன்னாருக்குச் செல்லப்போவதாக இன்று செய்தி வந்துள்ளது. அந்த அமைப்பே இந்தச் செய்தியினை பத்திரிக்கையாளரிடம் தெரிவித்திருக்கிறது. அவர்கள்

போகும்போது எல்லை மீறுகிறார்கள் என்று யாரேனும் தடுக்கக் கூடும் அல்லவா? அதனால் அவர்களுக்கு ஆபத்து வருவதற் குரிய வாய்ப்பு இருக்கிறதே! இலங்கை அண்டை நாடுதான். ஆனாலும் அது அன்னிய நாடு. அதற்குள் போவதற்கு மத்திய அரசினுடைய அனுமதி வேண்டுமல்லவா? மாநில அரசையாவது அவர்கள் அணுகினார்களா? இல்லையென்று சொன்னால், இங்கிருந்து சில பிரமுகர்கள் சென்று வருவதைப் போலவே அவர்களும் சென்று வரலாம் என்று நினைக்கிறார்களா? அப்படி யென்றால், மேலும் சிலர் செல்வதற்கு அது ஊக்கம் அளிப்ப தாகாதா? அங்கே போய்க் கூட, இலங்கை அரசுடன் பேசாமல் அல்லது தம்மைப் போன்ற மீனவர்கள் அமைப்புடன் பேசாமல், எல்.டி.டி.ஈ. யிடம் பேசப் போகிறார்களாமே. மீனவர்களின் சார்பிலும், இலங்கை அரசின் சார்பிலும் எல்.டி.டி.ஈ. பேச முடியுமா? ஒரு வேளை நமது மீனவர்களையே புலிகளின் ஆதரவாளர்களாக மாற்றும் திட்டம் 'ப்ரெயின் வாஷ்' செய்யும் ஒரு திட்டம் அவர்களிடம் இருப்பதாகச் சொல்கிறார்களே, அதற்காக இவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களா? அப்படிப் பட்ட வசியத்திற்கு நமது மீனவர்கள் ஆட்பட மாட்டார்கள் என்றாலும் இது ஒரு புதியதான பயணமாக இருக்கின்ற காரணத்தால் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பயணத்தைப் பற்றி தங்களுடைய கருத்தை, அரசினு டைய கருத்தைத் தெரிவிக்கவேண்டுமென்று விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தச் செய்தியை நானும் பத்திரிகையிலேதான் பார்த்தேன். அப்படி ஒரு தூதுக் குழு பயணம் செய்வதற்கான அனுமதி மத்திய அரசிடத்திலேயிருந்து அவர்கள் பெற்றதாகத் தெரிய வில்லை. அவர்கள் கேட்டதைப் போல மாநில அரசிடத்திலே அது குறித்து ஒரு அனுமதி தேவை என்று அவர்கள் கேட்டிருப்ப தாகவும் எனக்குத் தகவல் இல்லை. அவர்கள் அத்தோடு நிறுத்திக்கொள்ளாமல் இலங்கையிலே யாருக்கு ஆதிக்கம் இருக் கிறது என்ற பிரச்சினைக்குச் சென்றார்கள். அது இப்போது நாடறிந்த உலகறிந்த உண்மை. இப்போது இலங்கையில் தமிழ் ஈழப் பகுதியில் விடுதலைப்புலிகளினுடைய செல்வாக்குத்தான் இன்றைக்கு உயர்ந்து நிற்கிறது. இலங்கை செல்கின்றவர்கள் அப்படி அனுமதி கிடைத்துச் சென்றால் அங்கேயுள்ள விடுதலைப் புலிகளைச் சந்திப்பதில் தவறில்லை. ஆனால் அனுமதிக் காமல், அனுமதி பெறாமல் அவர்கள் அப்படிச் செல்வதற்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை. எனவே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் இந்தச் சந்தேகத்தைக் கேட்கிற அதே சாக்கில் விடுதலைப் புலிகளையும் ஒரு இடறு இடறிவிட்டுச் செல்கிறார். நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன். விடுதலைப் புலிகள் மீது அவ்வளவு ஆத்திரம் நமக்கு இருக்கக்கூடாது. இங்கே தமிழ்நாட்டில் போராளிகள் பல பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்

கள் எல்லாம் விடுதலைப் புலிகள் அல்ல. அதற்காக விடுதலைப் புலிகள் இங்கே உலவுகின்றார்கள் என்றும் கூறமுடியாது. ஏனென்றால் தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் வந்து வாழ வேண்டிய அவசியம் இப்போது இல்லை அவர்களுக்கு. காரணம் அவர்களுக்கு தமிழ் ஈழத்திலே இருக்கின்ற பணி நிரம்ப இருக்கின்ற காரணத்தால் அவர்கள் வர வேண்டிய அவசியமில்லை. அண்மையில் கூட நூற்றுக்கு மேற்பட்டவர்கள் பயங்கரமான ஆயுதங்களோடு 'டக்ளஸ்' என்பவருடைய தலைமையிலுள்ள இன்னொரு இயக்கத்தைச் சார்ந்தவர்கள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்களில் சில பேர் கவலைப்படாமல் விடுதலைப் புலிகளைப் பற்றி மாத்திரம் கவலைப்பட்டுக் கொண்டு இருப்பது வேதனை அளிக்கக்கூடியது.

4. கவன ஈர்ப்பு.

(அ) சென்னை மாநகராட்சிப் பள்ளிகளுக்குள் சமூக விரோதிகளின் செயல்களால் ஏற்படும் பாதிப்பு குறித்து.

திரு. செங்கைசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை மாநகராட்சிப் பள்ளிகளின் எல்லைக்குள் சமூக விரோதிகள் செய்கின்ற தீய செயல்களினால் ஏற்படுகின்ற சுகாதாரப் பாதிப்பு குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : நான் கீழ்க்கண்ட அறிக்கையை அவைமுன் வைக்கிறேன்:

அறிக்கை.

சென்னைப் பெருநகரில் கட்டாய இலவசக் கல்வி வசதியளிக்கும் பொருட்டு 300 தொடக்க நடுநிலைப்பள்ளிகளையும் உயர்நிலைக் கல்வி வசதியளிக்க 22 உயர்நிலைப்பள்ளிகளையும் மேல்நிலைக் கல்வி வசதி அளிக்க 13 மேல்நிலைப்பள்ளிகளையும் மாநகராட்சி நடத்திவருகிறது. அநேகமாக எல்லாப் பள்ளிகளிலும் அடிப்படை வசதிகள் உள்ளன. சில பள்ளிகளில் உள்ள கழிப்பறையை சுற்றுப்புறத்திலுள்ள பொது மக்கள் பயன்படுத்துவதால் பாதிக்கப்பட்டு, மாணவர்கள் பயன்படுத்த முடியாமல் மீண்டும் மீண்டும் பழுது பார்க்கப்பட வேண்டிய நிலையிலுள்ளன. மேலும் சில பள்ளிகளில் சுற்றுப்புறச் சுவர்கள் இல்லாததால் பள்ளி வளாகத்தில் அல்லது பள்ளிக்கு அருகில் மலம், சிறுநீர் கழித்தல், கள்ளச் சாராயம் விற்பனை, பள்ளிப்